சுருக்கம்

நிர்வாகம் – தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை – பத்திரிகையாளர் ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.7,500/–லிருந்து ரூ.8000/–ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்:2 நாள்: 11 01.2016

திருவள்ளுவர் ஆண்டு 2046

மன்மத வருடம் மார்கழி மாதம் –26 ம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.147. செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள்.03.04.1986.
2. அரசாணை (நிலை) எண் 293, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 16.07.2010.
3. அரசாணை (நிலை) எண் 191, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 14.09.2011.
4. அரசாணை (நிலை) எண் 246, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 07.10.2013.

/////

----

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, பத்திரிகைத் துறையில் நீண்டகாலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்டு, பணியிலிருந்து ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களின் சமூகப் பணியைக் கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க வகை செய்து மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 14.04.1986 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது மாதம் ரூ.250/– ஓய்வூதியம் வழங்கப்பட்டது. பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.4,000/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தியும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தியும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணைப்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ6,000/–லிருந்து ரூ.7,500/– ஆக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில், 29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் பத்திரிகையாளர்களது குடும்ப சூழ்நிலைகளையும் தற்போதைய காலசூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு பத்திரிகையாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தொகை ரூ.7,500/–லிருந்து ரூ.8,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மேற்படி அறிவிப்பினை

த.பி.பா.,